# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1634/34 - 2010 ජනවාරි 02 වැනි සෙනසුරාදා - 2010.01.02

*1634/34 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

(முத்திரை)

மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கையில் பகிரங்க அவசரகால நிலைமையொன்று இருக்கின்றமை காரணமாக, பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கினைப் பாதுகாத்தல், சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணிவருதல் ஆகியவற்றுக்குப் பின்வருமாறு செய்தல் உகந்ததாகவிருக்கின்றதென அபிப்பிராயப்படுகின்றேன் :-

சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தாலும் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் இலங்கையெங்கணும் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு சனவரி மாதம் 2 ஆம் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென இப்பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்துகிறேன் என்பதை அறிவீராக.

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு சனவரி மாதம் 2 ஆம் நாளன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,<br>
சனாதிபதியின் செயலாளர்.

1-520